சுருக்கம்

நகராட்சி நிர்வாகம் – ஆவடி நகராட்சி – நகரமைப்பு பிரிவு – இரண்டு நகரமைப்பு ஆய்வர் பணியிடம் தோற்றவித்தல் மற்றும் திருவொற்றியூர் நகராட்சியில், இரண்டு நகரமைப்பு ஆய்வர் பணியிடங்கள் ஒப்படைப்பு செய்ய – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நட3(1)) துறை

அரசாணை (பி) எண். 458 நாள் 04.10.2007

படிக்கப்பட்டது:-

நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண் 12513/2007/டிபி1, நாள் 12.03.2007 மற்றும் 30.7.2007.

***

ஆணை:

மேலே படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பில், ஆவடி நகராட்சி 2.20 லட்சம் மக்கள் தொகை கொண்ட 65 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடைய தேர்வுநிலை நகராட்சி ஆகும் என்றும், இந்நகராட்சி வளர்ந்து வரும் நகரமாக இருப்பதால், மக்கள் தொகை நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வருகிறது என்றும் அதனால், ஆண்டுதோறும் குடியிருப்புகளும், மனைப் பிரிவுகளும் பெருகி வருகின்றன என தெரிவித்து, ஆண்டுதோறும் 1200–ற்கு மேல் கட்டிட விண்ணப்பங்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், போதிய அளவு நகரமைப்பு பணியாளர்கள் இல்லாததால் ஆக்கிரமிப்பு பணிகள், அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டிடங்கள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான இடங்களை தனியார்கள் ஆக்கிரமிப்பு செய்யும் நிலையை தடுக்கும் நடவடிக்கைகளை உடனுக்குடன் கவனிக்க இயலாமல் காலதாமதம் ஏற்படும் நிலை உள்ளது எனவும் தெரிவித்துள்ளார். மேலும், ஆவடி நகராட்சியில், தற்போது ஒரு நகரமைப்பு அலுவலர் நிலை–1 மற்றும் ஒரு நகரமைப்பு ஆய்வர் பணியிடம் மட்டுமே உள்ளது என்றும், அரசாணை (நிலை) எண் 581, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள் 21.04.1981–ல் நிர்ணயிக்கப்பட்ட அலகு படி 300 கட்டிட விண்ணப்பங்களுக்கு ஒரு நகரமைப்பு ஆய்வர் பணியிடம் தேவை என்றும், ஆவடி நகராட்சியில் நகரமைப்பு பிரிவின் அத்தியாவசிய பணிகளை கருத்திற் கொண்டும் தேர்தல் போன்ற முதன்மையான பணிகளை செய்வதற்கும், நகராட்சியின் நிதி நிலைமை திருப்திகரமாக உள்ளதாலும், கூடுதலாக இரண்டு நகரமைப்பு ஆய்வர் பணியிடங்களை தோற்றுவிக்க ஆவடி நகரமன்றம் தனது 30.5.2006 நாளிட்ட தீர்மானம் எண் 20ல் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

2. திருவொற்றியூர் நகராட்சியில், மொத்தம் நான்கு நகரமைப்பு ஆய்வர் பணியிடங்கள் உள்ளது என்றும், அந்நகராட்சியில் மூன்று ஆண்டுகளுக்கு சராசரியாக 220 கட்டிட அனுமதி மனுக்கள் பெறப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டி அந்நகராட்சிக்கு இரண்டு நகரமைப்பு ஆய்வர் பணியிடங்கள் போதுமானது என்றும், மீதமுள்ள இரண்டு நகரமைப்பு ஆய்வர் பணியிடங்களை அரசுக்கு ஒப்படைக்கும்படி தணிக்கையில் தடை எழுப்பப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கூடுதலாக உள்ள இவ்விரண்டு நகரமைப்பு ஆய்வர் பணியிடங்களை மற்ற நகராட்சிகளுக்கு மாறுதல் செய்து உத்தரவிடுமாறும், இவ்வாறு இரண்டு

நகரமைப்பு ஆய்வர் பணியிடங்களை ஒப்படைப்பு செய்ய திருவொற்றியூர் நகர மன்றம் 13.7.95 நாளிட்ட தீர்மான எண் 769–ல் அனுமதி அளித்துள்ளது என்றும் தெரிவித்து, எனவே, ஆவடி நகராட்சியில் இரண்டு நகமைப்பு ஆய்வர் பணியிடங்களை அடிப்படை சம்பளம் ரூ.4500–125–7000 என்ற ஊதிய விகிதத்தில் தோற்றுவிக்கவும், திருவொற்றியூர் நகராட்சியில் தணிக்கையில் சுட்டிக்காட்டியதன்படி இரண்டு நகரமைப்பு ஆய்வர் பணியிடங்களை ஒப்படைக்கவும் பெறப்பட்ட செயற்குறிப்புகளை பரிந்துரை செய்து அதன் மீது உரிய ஆணை பிறப்பிக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அரசை கோரியுள்ளார்.

3. மேற்கூறிய நிலையில், திருவொற்றியூர் நகராட்சியில் அரசிடம் ஒப்படைக்கக் கருதியுள்ள இரண்டு நகரமைப்பு ஆய்வர் பணியிடங்களை, ஆவடி நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யக் கோரும் நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை ஏற்கலாமென கருதி அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு எண். 57808A/நிதி (நநிகுவ) / 2007, நாள் 07.9.007–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து
அரசுச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
நகராட்சி ஆணையர், திருவொற்றியூர் / ஆவடி நகராட்சிகள்.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககம், குறளகம், சென்னை–108.
நகல் : நிதி (ந.நி.கு.வ) துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ஆந.2) துறை, சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்